DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF, NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | : | **O.S.60/2021** |
| **Deposition of witness for** | : | **Plaintiff/Defendant** |
| **Serial No. of Witness** | : | **PW.2** |
| **Name** | : | அந்தோணி ஆரோக்கியரமேஷ் |
| **Father's Name** | : | சவரிமுத்து |
| **Village** | : | நான்குநேரி தாலுகா பத்தை பகுதி 1 கிராமம் |
| **Taluk** | : | நான்குநேரி தாலுகா |
| **Age** | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of day of 20.06.2023.

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை

நான் நான்குநேரி தாலுகா பத்தை கிராமம் பகுதி-ல் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்ற அழைப்பாணையில் நான்குநேரி வட்டம், பத்தை பகுதி 1 கிராமம் புல எண் 714 மற்றும் புல எண் 713/3ஏ-க்கு உரிய புல வரைபடம், அ பதிவேடு, மற்றும் அடங்கல்பதிவேடு கேட்கப்பட்டிருந்தது. மேற்படி சர்வே எண்களுக்காக புல வரைபடம் சா.சா.ஆ.1. சர்வே எண் 714க்கான அ பதிவேடு தாக்கல் செய்கிறேன் அது சா.சா.ஆ.2. மேற்படி அ பதிவேட்டில் அருள்மிகு குலசேகர அம்மன் கோவில் என கண்டுள்ளது. அது சர்க்கார் புறம்போக்கு ஆகும். அந்த இடத்திற்கு தனிப்பட்டா இதுவரை யாருக்கும் அரசு ஆவணங்களின்படி வழங்கப்படவில்லை. புல எண் 713/3ஏக்கான அ பதிவேடு தாக்கல் செய்கிறேன். அது நஞ்சை. அது வள்ளிநாயகக்கோனார் பெயரில் உள்ளது தற்போது ஆவுடையப்பன் பெயரில் அடங்கல் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. மேற்படி அ பதிவேட்டு நகல் மற்றும் அடங்கல் பதிவேடு நகல் சா.சா.அ.3. புல எண் 714க்கான அடங்கல் நகல் தாக்கல் செய்கிறேன் அது குலசேகர அம்மன் கோவில் பெயரில் உள்ளது. அது சா.சா.ஆ.4. புல எண் 714க்கு தென்கிழக்கில் புல எண் 713/3ஏ இருக்கிறது.

குறுக்கு விசாரணை

புல எண் 714ல் அரசு ஆவணத்தின்படி பொதுப்பாதை எதுவும் துலங்கவில்லை என்றால் சரிதான். புல எண் 714 யாருடைய அனுபவத்தில உள்ளதோ அதைதான் அ பதிவேட்டில் உள்ள 12வது வரிசையில் சொல்லப்பட்டிருக்கும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எந்த ஆண்டு தயார் செய்யப்பட்டது என்றால் 1986ல தயார் செய்யப்பட்டது. 1986லிலேயே குலசேகரநங்கையம்மன் கோவில் புல எண் 714ல் அமைந்திருந்ததால்தான் அந்த குறிப்பு கண்டுள்ளது என்றால் சரிதான்.